


உ

சிவமயம்.

இரங்கோன் பசுமந்தானில்

திருக்ஷேத்திரங்கொண் டெழுந்தருளியிராநின்ற

பழனியாண்டவர்

தைப்பூசமகோற்சவ

காவடிச்சிந்து.

---:0:---

இஃது

நாகைப்பட்டணம்

அ. பி. அநந்தநாராயணசுவாமி உபாத்தியாயரால்

இயற்றப்பட்டது.

இரங்கோன்

பிறையர் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1904-௵.

உ

கணபதிதுணை.

காவடிச் சிந்து.

வெண்பா.

ஏவுமயி லூர்தியன்பர் இடும்பேச ராலமைந்த
காவடியை மானிடர்கள் கண்டுமே - தாவிமிகத்
தான்தூக்கப் பிரார்த்தனைகள் தனைச்செலுத்த வதைச்சிந்தாய்
நான்புகலக் கரிமுகனை நாடி.

நாதநாமக்கிரிகை-அடதாளம்.

கண்ணிகள்.

1. அறங்களிலங்குந் திரு இரங்கோன் நகர்செழிக்கும்
அதிபதியே பழனி யாண்டவா நல்
நிதியாய்-கடம்ப மலர்பூண்டவா நாயே
னுவலாகவே காவடிதூக்கி பாவதுசெய நாவலா முத
லானைமுகவன்பணி யீன்றவா இந்த
மாநிலத்தோர்க்கருளாண்டவா.

2. பரமன்குருவாகிமுன் பிரமன் தனைச்சிறையில்
படுத்திடபுவி வந்தவேலனே கரம்
பிடித்த தெய்வானை வள்ளிலோலனே மகிழ்
பிரவிக்குகந்திடு சரவணைதனி லுறுமையாகியே யருமைரங்கோனில்
அதிபதியே பழனியாண்டவா நல்
நிதியாய்கடம்ப மலர்பூண்டவா

3. தரணிதனிலனேக ரரிமருகனேயுண்மை
தான்பாடிச் செயலடைந் தாரெனக் கண்டு
நான்பாடுவ தெப்படியோவென குயில்
சாயல்போல்தொனி பாயகாகமும் ஞாயமாகிட் ஏயுமோபிழை
சார்ந்ததரியேன் பழனியாண்டவா நன்மை
லோர்ந்துகடம்பமலர் பூண்டவா

4. கீருடன்பா விளநீர்பன்னீரு சந்தனம்விபூதி
தேனுபாலால்அபிஷேகமாகவே இந்த
நாநிலத்தோர் மகிழ்வுமேலாகவே கூடி
சித்திரக்காவடி நத்திச்செய்திடும் பத்திகள்வெகு யுத்தியாகவே

தூக்கடிச் சிந்து.

ஜெயஜெயனே பழனியாண்டவா குவித
நயமாய்கடம்ப மலர்பூண்டவா

5. தரமாய் முதுரை வேங்கை மரமதால் இருவாடு
தண்டதுதங்க நிரமாய்க் காட்டியே தாங்க
திங்கள்போல் சந்தனக்கால்கள் பூட்டியே அதில்
தந்திமாமுகன் விந்தைவல்லபை சுந்திரவாகு விருந்தபாவனை
தரித்தச்சித்திர வேலைக்கூட்டியே வேறோர்
புரத்தில் மயில்வீரனைத் தீட்டியே.

6. தெய்வானைவள்ளியிருவ ராயனருகிலிருக்க
செய்தனர்நவ ரத்தினவேலையே மாரன்
கையின்வில்போல் வளவிட்டார் மேலையே திரு
நின்னமர்க்கே பண்ணுங்குயர்பெற வன்னபணிதிக ளென்னசொல்
செப்பிடலாமோ பழனியாண்டவா வர்சங் (வேன்
கப்பிட கடம்பமலர் பூண்டவா

7. மல்லிகை செண்பகங்கொன்றை முல்லையுங் கடம்பமலர்
மாமலராரங்க ளலங்காரமாய்ச் செய்து
தேமருவுங் கீர்த்தன மொய்யாரமாய் வெண்பா
மணிதேவாரமுந் துணைவிருத்தமு மிணையும் பாடுமுன் தனக்குப்ரா
மாணிடர்களிருபால் முத்திரையிட்டு சிலர் (ர்த்தனை
யேணித்திரேகத்தி னிலலகுதொட்டு

8. அரகரா முருகாகுகா சரஹணபவா சண்முகா
அருமைவேலா கந்தாவென ஓதியே அரி
மருகனே அன்பர்க்குத்தயாநிதியே யென
ஆடியுத்துதி பாடியும்பத நாடியுஞ்சிரஞ் சூடியாவரும்
அதிபதியே பழனியாண்டவா நல்
நிதியாய்க் கடம்பமலர் பூண்டவா

9, காவடி யெடுத்துச்சிலர் சேவடிதாருமெனவே
கண்டிடவரும் பெருமை கேளுமே வெல்வே
லென்றுசொல்லிட துந்துபிவாழுமே சின்னங்
காளஇன்னரி மேளமிருவகை யாளுந்தம்பட்டைத் தாழ்விலா சுதி
கட்டிட நகராபேரி தாளமும் பதி
னெண்டுவாத்திய முழங்கீளமும்

10. கொடிகுடை கொந்தஞ்சுருட்டி எடுபிடி ஆலவட்டமு
மளவுசொல்ல விதம்வெகுவாகுமோ அடியிலென்
முடிபட வினையது ஏகுமே நலங்
குறியசாமரை நிறைவுவிசிரியு விரிபவுந்தமும் பெரிய பிறைகளும்
கொண்டுவார புதுமை யநேகமே சிலர்
பண்டுதிசெய்திட நல்யோகமே.

11. அஞ்செழுத்ததனை சத்தி நெஞ்சினில் நினையவேலர
அமைந்திடவதனை நீரும்வாங்கிட சூரன்
சமரதிலவ னுயிரைவாங்கிடச் செய்த
ததுபோல்வேலதுபதியில்யாவருமதியாய்ரத்தின நிதியமைத்துமே
தயவாகக் காவடியில் தாக்கியே நல்ல
மயிலாவுன்னடிதுதி யாக்கியே.

12. கோதிலாவாலய நாலு வீதிபுகூட்டாடி சேர்வை
கொண்டுசிலர் அபிஷேகமாட்டிட சிலர்
தெண்டனிட் டருச்சனைகள் தீட்டிட பலர்
குண்டுகும்பிடு தேண்டமெய்திட கண்டுவேந்தர்கள் பண்டுவுந்திட
பட்சமடைவார்கள் சில ரங்கமும் பிர
தட்சணஞ்செய்வார்கள் மனம் பொங்கியே

13. காணிக்கையிடுவார் சிலர் தேன்தினைமா பாஞ்சாமிர்தம்
கர்த்தனுக்கு நத்திப்படைப்போர்களும் தேங்காய்
பத்தினிமாரோடு உடைப்போர்களும் துஷ்டர்
காலனைசிறு பாலனையருள் ஆலமீதினில் ஞாலமாகவே
கனவானைத் துதிபுரிவார் சிலர் தேக
பிணியகற்று வார்களென்பார் சிலர்

14. அண்ணலே அடியாரொனுத் தென்முனிக்குபதேசித்த
ஐயனே தூய்யனே யென்பார் அநேகர் பன்னிரு
கையனே மெய்யனே என்பாரநேகர் மகி
ழாங்கொள்புனமதில் வேங்கைமரமதாய் ஓங்கிவளர்ந்திடுங்காங்கே
ஆடிடுவோர் சிலபேர்களுன்பதம் திரு (யாவென
பாடிதுதிபுரிகுவார்கள் நிதம்

14. உன்னிதகாவடிவகை எண்ணிட லட்சாதிலட்சம்
ஓதிடவாயிர நாவெழாதுமே நான்
ஏதுமறியேனெம்முடன் வாதுமே வன
இராஜராகிய தேசுவேபிர காசரோமயிலீசராகியே
இடும்பனை அடிமை செய்தீரென்றும் ஜெய
கடம்பணிந்தாரெனச் சொல்வார்கண்டும்

16. சொல்லித்துதி செய்யுஞ்சிலர் வல்லவர்போல் புல்லறிவன்
சேர்ந்திட நினைத்துச சிந்துபாடினேன் விண்
ணோர்ந்திடும் பதமலரைத் தேடினேன் ஜெக
ஜோதியே தயாநிதியே பிறைக்காதியார்துணை வேதியாகுறை
திரத்தையின்னது என் றறிகிலேன் உந்தன்
கரத்தின் பெருமை குறிகிலேன்

காவடிச்சிந்து முற்றிற்று.

உ

சிவமயம்.

பழனியாண்டவர்மீது பாடிய

கீர்த்தனம்.

—o—

இராகம்-எதுகுலகாம்போதி-அடதாளம்,
கண்ணிகள்

சாலவேயான் முக்காலம் போற்றினேன் வேலவா வாருமே
வினைதீருமே கிருபை தாருமே நீருமே
சண்முகா சண்மயமீதாள்குகா செந்திவேல்முருகா. 1.

சென்னிமலையில் கன்னியோடிலங்கும் பன்னிருகையனே
அன்பர்மெய்யனே வெண்ணீர்துய்யனேஐயனே சேவைதா
திருநடனபாதா ஏழையென்மேல் வாதா 2.

ஈசனுக் குபதேசமளித்த வாசனே கந்தனே உமைமைந்தனே
விடா தெந்தனே சுந்திரனே
இல்லையா மனமதுவல்லையா அடியார்கள்தொல்லையா 3

சேவன்மருகனே அநந்துதாசன் சொல்கேட்டு
வினைஓட்டு வழிகூட்டு மெய்காட்டு
கேளுமே சொல்வதைக்கேட்டாளுமே ஆண்டால்மனந் தாளுமே. 4

வாழி விருத்தம்.

எந்நாளு மிதைப்படித்தோ ரினிதாய் வாழி
உன்னிதமாய்ச் செவியிலுற்றோர் உறவாய் வாழி
நன்னுமறை யோர்சாஸ்திரியர் வைசியர் சூத்திரர்
அண்ணலடி போல்தழைத்து வாழ்வார் தாமே.

கண்ணிகள்-முற்றிற்று.